### தி.மு.க. அரசால் புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகத் தொடங்கப்பட்ட

# ‘தமிழ் மொழி கற்போம்’ திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளதா?

## குழந்தைகளுக்கான கல்வியைச் சாத்தியப்படுத்துமா அரசு?

சென்னை, ஆக.29-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், என்னாலும் எங்கள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கடந்த கால திராவிட மாடல் அரசால் புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகத் தொடங்கப்பட்ட தமிழ் மொழி கற்போம் திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளதா? திருப்பூரில் உள்ள புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி கிடைப்பதற்கான திட்டத்தை அரசு சாத்தியப்படுத்துமா? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. அவர்கள் கல்வி கற்க வசதியாக ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் ஆன்லைன் வசதி ஏற்பாடு செய்ய கோரிக்கை எழுந்துள்ளது.

தொழில் நகரமான திருப்பூரின் பொருளாதாரம், உள்நாட்டு தொழிலாளர்கள் மட்டுமல்லாது லட்சக்கணக்கான புலம் பெயர் தொழிலாளர்களின் உழைப்பிலேயே இயங்குகிறது. வடமாநிலங்களிலிருந்தும், தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்தும் வாழ்வாதாரம் தேடி வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால் இவர்களது குழந்தைளுக்கான அடிப்படைக் கல்வி என்பது முழுமையாக கிடைக்கப்பெறாத நிலை நீடிக்கிறது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்களின் குழந்தைகள் இங்குள்ள அரசுப் பள்ளிகளில் இணைந்து கல்வி கற்றுத்தான் வருகிறார்கள். இருப்பினும், அந்த எண்ணிக்கை முழுமையானதாக இல்லை. திருப்பூரில் உள்ள புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் குறித்த முழுமையான தரவுகள் மாவட்ட நிர்வாகத்திடமோ, தொழிலாளர் நலத்துறையிடமோ இல்லை என்ற குற்றச்சாட்டும் எழுகிறது. எனவே, துறை சார்ந்த அதிகாரிகளை ஒருங்கிணைத்து மாவட்ட முழுவதும் ஆய்வு மேற்கொண்டு, பள்ளி செல்லா குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களை அருகில் உள்ள அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு போர்க்கால அடிப்படையில் துரிதப்படுத்த வேண்டும். புலம்பெயர் தொழிலாளர்கள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதிகளில், குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதன் நோக்கம் மற்றும் கல்வி கற்பதன் அவசியம் குறித்து அவர்களிடம் தொடர் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

மாவட்ட மற்றும் அரசு நிர்வாகத்தின் இத்தகைய முயற்சிகளுக்குத் திருப்பூரின் தொழில்துறையினரும், தொழிற்சங்கத்தினரும் முழு ஒத்துழைப்பு அளிக்க முன்வர வேண்டும் என கல்வியாளர்கள் வலியுறுத்துகின்றனர். பெற்றோர்களிடையே பணி நிலையற்ற தன்மை காரணமாக அவர்கள் அடிக்கடி இடம் மாறுவதும் தொடர் கல்விக்குப் பெரும் சவாலாக அமைகிறது. இதனால் பல குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் வீடுகளிலேயே முடங்கும் நிலை ஏற்படுகிறது. இதற்குத் தீர்வாக, கடந்த 2023ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், என்னாலும் எங்கள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் அரசால் புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகத் தொடங்கப்பட்ட “தமிழ் மொழி கற்போம் திட்டம்” தற்போது செயல்பாட்டில் உள்ளதா? என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

அந்தந்த மாநில மொழி ஆசிரியர்களைக் கொண்டு தமிழைக் கற்றுத்தரும் வகையில் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தின் செயல்பாடுகளை அரசு மீண்டும் தீவிரப்படுத்த வேண்டும். தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில், மொழி சார்ந்த ஆசிரியர்கள் நேரடியாக இல்லாவிட்டாலும் கூட ஏஐ (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பம் மூலமாகப் பள்ளிகளில் உள்ள ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகளைப் பயன்படுத்த முடியும்.

ஆரம்ப கட்டத்தில் புலம் பெயர் மாணவர்களின் தாய்மொழியிலேயே பாடங்களை ஏஐ மூலம் கற்பித்து, அவர்களின் பள்ளி வருகையை உறுதி செய்யலாம். அதன்பிறகு தமிழ் உள்ளிட்ட மொழிகளைக் கற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இது அவர்களின் கல்வி அறிவை மேம்படுத்துவது மட்டுமன்றி, நல் பழக்க வழக்கங்களையும், பண்பாட்டையும் அவர்களிடம் கொண்டு சேர்க்க வசதியாக இருக்கும்.

இது குறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க இணைச் செயலாளர் குமார் துரைசாமி கூறு கையில், “கல்வி என்பது ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை உரிமை. அதை உறுதி செய்ய வேண்டியது சமூகத்தின் கடமை. இன்று புலம் பெயர் தொழிலாளர்கள் இல்லாமல் தொழில்கள் இயங்க முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது. ஆனால், இங்கு குடும்பமாக வசித்து வரும் தொழிலாளர்களின் பிள்ளைகள், பெற்றோர் வேலைக்குச் சென்று விடும் நிலையில் பள்ளிக்குச் செல்லாமல் வீடுகளிலேயே முடங்குவது கவலையளிக்கிறது. இது இந்த குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதிப்பதோடு, பல்வேறு சமூக சிக்கல்களுக்கும் வழி வகுக்கும். மொழித்தடை, முகவரி சான்றிதழ் இல்லாமை ஆகியவை பள்ளிச் சேர்க்கைக்கு முக்கியத் தடைகளாக உள்ளன. அரசும், நிறுவனங்களும் இணைந்து ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் ஆன்லைன் வசதிகள் மூலம் அவர்களின் தாய்மொழியிலும், தமிழக பாடத்திட்டத்திலும் கல்வி கற்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதியை உறுதி செய்யக்கோரி ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பிலும் ஒன்றிய, மாநில அரசுகளுக்குக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 19க்கும் மேற்பட்ட மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் பணிபுரிகின்ற திருப்பூர், கோவை மாவட்டங்களில் அவர்களின் குழந்தைகளுக்கான கல்வியை உறுதி செய்ய அரசு, மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும். அதற்கு தொழில்துறையினர் முழு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம்” என தெரிவித்தார்.

### ஆணவக் கொலைகள் குறித்து ஆராய

# தி.மு.க. ஆட்சியில்தான் குழு அமைக்கப்பட்டது!

## சட்டப்பேரவையில் கழகக் கொறடா எ.வ வேலு பேச்சு!

சென்னை, ஆக.29-

ஆணவக் கொலைகள் குறித்து ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி கே.என். பாட்ஷா அவர்கள் தலைமையில் குழு அமைத்தது தி.மு.க. ஆட்சியில் தான் என்று சட்டமன்றத்தில் கழகக் கொறடா எ.வ வேலு பேசினார்.

சட்டமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின் போது சட்டமன்ற கொறடா எ.வ.வேலு அவர்கள் பேசியதாவது:-

இங்கு சமூக நீதித்துறை அமைச்சர் பேசும்போது ஆணவக் கொலைகள் தொடர்பாக ஒரு கருத்தினைச் சொல்லி இருக்கிறார்.

இந்த அவையிலே அந்தப் பகுதியிலும் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் இந்த பகுதியிலும் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அவர்கள் பேசும் பணி நிறைவு பெற்ற நீதியரசர் பாட்ஷா அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது என்று பேசினார்கள்,

குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் கே.என்.பாட்ஷா அவர்கள் தலைமையில் குழு அமைத்ததே திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்கள் - மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

சென்னை, ஆக.29-

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் டி.ஆர்.பி. ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் இணைச்செயலாளர், ஆலோசகர்கள், துணைச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 1-9-2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் அன்பகம் அரங்கில் அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. மேற்குறிப்பிட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்க அழைக்கிறோம்.

பொருள்-கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு டி.ஆர்.பி. ராஜா அறிவித்துள்ளார்.

# ‘முரசொலி’ விநியோகப் பிரிவு ஊழியர் கி.மகாவிஷ்ணு இல்ல மணவிழா!

## இன்று திருமண வரவேற்பு நடைபெறுகிறது!

சென்னை ஆக. 29-

முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரியும் கி. மகாவிஷ்ணு- காந்தலட்சுமி இணையரின் மகள் ம.ரக்‌ஷிதாவுக்கும் க.சகாதேவன் ச.துலபமணி இணையரின் மகன் மெய்கண்டனுக்கும் திருமண விழா சென்னை அடுத்த செங்கல்பட்டில் அமைந்துள்ள எஸ்.எம்.கே மஹாலில் நாளை (30.8.2026) காலை 7.30 மணி முதல் 9.30 மணியளவில் நடைபெறுகிறது.



திருமண விழாவில் முரசொலி ஊழியர்கள், மணமக்களின் உறவினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முன்னதாக மணவிழா வரவேற்பு இன்று (29.8.2026) மாலை 6.30 மணி அளவில் நடைபெறுகிறது.

### தி.மு.க. ஆட்சியில் பிஏபி பாசனக் கால்வாய்களை தூர் வார ஆண்டுதோறும் நிதி ஒதுக்கப்பட்டது!

# த.வெ.க. ஆட்சியில் கால்வாய்களைத் தூர் வார நிதி ஒதுக்கீடு செய்யவில்லை!

## விவசாயிகள் கடும் அதிர்ச்சி!

சென்னை, ஆக.29-

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த கால திராவிட மாடல் ஆட்சியில் பிஏபி பாசன கால்வாய்களை தூர் வார ஆண்டுதோறும் ரூபாய் 10 கோடி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் முதல் கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டு பணிகளும் நடைபெற்ற நிலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக 2, 3ம் மண்டலம் பாசனப் பகுதிகளில் பிஏபி கால்வாய்களை தூர் வார நிதி ஒதுக்கீடு செய்யவில்லை இதனால் விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் பிஏபி பாசனத்திற்குட்பட்ட இரண்டு மண்டலம் வீதம் 2 ஆண்டுகளில் நான்கு மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. பாசன கால்வாய்களில் தண்ணீர் திறப்பதற்கு முன்பு, அந்த கால்வாய்களை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை. திராவிட முன்னேற்றக் கழக தலைவர், எந்நாளும் எங்கள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த கால திராவிட மாடல் ஆட்சியில் பிஏபி பாசன கால்வாய்களை தூர் வார ஆண்டுதோறும் ரூபாய் 10 கோடி ஒதுக்கப் படும் என அறிவிக்கப் பட்டது. கடந்த ஆண்டில் முதல் கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டு பணி களும் நடைபெற்றது. விரைவில் இரண்டாம் மண்டலம் பாசனத்திற்கும் அடுத்து மூன்றாம் மண்டல பாசனத்திற்கும் என. நடப்பாண்டில் அடுத்தடுத்து தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த ஆண்டில் ஆட்சி மாற்றத்திற்கு பிறகு, தண்ணீர் திறப்புக்கு முன்பாக பாசன கால்வாய்களை தூர்வாருவதற்கு, உரிய நிதியை ஒதுக்காமல் கிடப்பில் போடப்படுவது விவசாயிகளுக்கு வேதனையை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து பிஏபி பாசன சபை சங்கத்தினர் பல முறை கோரிக்கை விடுத்தும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று, பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை சாலையில் உள்ள பிஏபி அலுவலக கூட்ட அரங்கில். பிஏபி பாசன சங்க தலைவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக்குழு தலைவர் மெடிக்கல் பரமசிவம் கலந்து கொண்டு பேசினார். இந்த கூட்டத்தின் போது, இரண்டாம் மண்டலம் மற்றும் மூன்றாம் மண்டலம் பாசன கால்வாய் தூர் வாருவதற்கு உரிய தொகையை விடுவிக்க கோரி, வரும் 31ம் தேதி, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக்குழு தலைவர் மெடிக்கல் பரமசிவம் கூறியதாவது: பரம்பிக் குளம் ஆழியாறு பாசனத்திட்டம் திருமூர்த்தி அணையில் இருந்து, கடந்த 15ம் தேதி முதல் இரண்டாவது மண்டல பாசனம் நடைபெற்றிருக்க வேண்டும், 2வது மண்டல பாசனத்திற்கு 135 நாட்களில் உரிய இடைவெளிவிட்டு ஐந்து சுற்று தண்ணீர் வழங்க வேண்டும். இந்த ஆண்டு மழைப்பொழிவு மிக மிக குறைவாக இருப்பதால் தொகுப்பு அணைகளில் உள்ளநீர் இருப்பை கருத்தில் கொண்டு. 2வது மண்டல பாசனத்திற்கு குறிப்பிட்ட நாளில் இருந்து தண்ணீர் திறக்கப் படவில்லை என்பது தெரிய வருகிறது. இந்த தருணத்தில் பிஏபி கால்வாய்களை முறையாக தூர்வாரி தண்ணீர் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கான நிதி ஒதுக்க வேண்டுமென பலமுறை மனுக்கள் மூலமாகவும், அமைச்சர்களையும், நீர்வளத்துறை செயலாளரையும் நேரில் சந்தித்தும் விளக்கமாக எடுத்துக்கூறி உள்ளோம்.

மேலும் பொள்ளாச்சி, உடுமலை, மடத்துக்குளம் மற்றும் வால்பாறை சட்ட மன்ற உறுப்பினர்களும் இதுகுறித்து பலமுறை சட்ட மன்றத்தில் எடுத்து கூறியுள்ளார்கள். கடந்த 25ம் தேதி நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரின் போது பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் நித்தியானந்தன் இதுகுறித்து பேசியுள்ளார். அதற்கு, நீர்வளத்துறை அமைச்சர், பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்தில் எதிர்வரும் பாசன காலத்தை முன்னிட்டு, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திற்குட்பட்ட பிரதான மற்றும் கிளைக்கால் வாய்களை தூர் வாருவதற்காக ரூ.14.98 கோடி மதிப்பீட்டில் 229 பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு நிதி துறையின் பரிசீலனையில் உள்ளது. இந்த பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன், பாசன காலத்திற்கு முன்னர் தூர்வாரும் பணிகள் நிறை வேற்றப்பட்டு கடைமடை பகுதிகள் வரை பாசன நீர் தங்கு தடையின்றி கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருந்தார். ஆனால், அன்று அமைச்சர் தெரிவித்த பதிலுடன் நின்று போனதுடன் கால்வாய் தூர் வாருவதற்கான உரிய நிதி ஒதுக்காமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளார்கள் என்று அவர் கூறினார்.

போராட்டம் நடத்த முடிவு :இரண்டாம் மண்டலம் மற்றும் மூன்றாம் மண்டலம் பாசன கால்வாய்களை தூர் வாருவதற்கு இன்றைக்கே பணி ஆணைகள் வழங்கினாலும், வேலைகள் முடிவடைந்து தண்ணீர் திறப்பதற்கு குறைந்த பட்சம் ஒரு மாத காலம் ஆகிவிடும். அதற்குள் இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களில் உள்ள தென்னை மரங்கள் காய்ந்து விடும் சூழல் ஏற்பட்டு விவசாயிகள் கடுமையான வேதனைக்கு ஆளாவார்கள். எனவே, இரண்டு லட்சம் ஏக்கர் பாசன நிலங்களில் காய்ந்து கொண்டு இருக்கும் தென்னை மரங்களை காப்பாற்றுவதற்கு, கால்வாய்களை தூர்வார ரூ.14.98 கோடியை உடனடியாக விடுவிக்க எடுக்க வேண்டும். எங்கள் கோரிக்கையை நிராகரிப்பதால், வரும் 31ம் தேதி, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளோம். விவசாயிகளின் நியாயம் கிடைக்க போராடுவோம் என திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக்குழு தலைவர் மெடிக்கல் பரமசிவம் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் ”மு.க.ஸ்டாலின் தாத்தாவின் அன்பு பரிசு என்ற தலைப்பில் கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி, நந்தா நகர் பகுதி கழகம் சார்பில் பகுதி கழக செயலாளர், மாநகராட்சி கிழக்கு மண்டல முன்னாள் தலைவர் எஸ்.எம்.சாமி ஏற்பாட்டில் 58 வது வட்ட கழகத்திற்குட்பட்ட மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் பயிலும் 100 மாணவ, மாணவிகளுக்கு நலதிட்ட உதவிகளை மாவட்ட கழக துணை செயலாளர் கோட்டை அப்பாஸ் வழங்கினார். இதில் வட்ட கழக பொறுப்பாளர்கள் பாலகிருஷ்ணன், இளங்கோவன், மாரிமுத்து, சண்முகம் உள்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# உடுமலைப்பேட்டை அருகே பி.ஏ.பி. பாசனக் கால்வாய் சேதம்!

## த.வெ.க.அமைச்சர்கள் மாறி மாறிக் கருத்து! குழப்பத்தில் விவசாயிகள்!

திருப்பூர், ஆக. 29-

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகே பிஏபி பாசன கால்வாயில் தண்ணீர் வரும் பாதை முழுவதும் சேதம் அடைந்துள்ளது, சேதத்தை தடுக்க குழாய் பாசனமே தீர்வு என அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார். இதற்கு வாய்ப்பில்லை என அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்ததால் விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர்.

கோவை, திருப்பூர் மாவட்ட விவசாயத்தின் பாசன ஆதாரமான, பிஏபி பிரதான கால்வாய் பராமரிப்பு குறித்து பல மாதங்களாக வலியுறுத்தியும், அரசு எவ்வித நடவடிக் கையும் எடுக்காதது விவசாயி களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாம் மண்டல பாசன காலம் துவங்கும் முன், அடிப்படை பராமரிப்பு பணிகளை மட்டுமாவது பொதுப்பணித்துறையினர் மேற்கொள்ள வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகே உள்ள திருமூர்த்தி அணையிலிருந்து பிஏபி நான்கு மண்டல பாசனத்துக்கும், பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப்படுகிறது. நான்கு மண்டலத்திலும், கோவை, திருப்பூர் மாவட்டத்துக்குட்பட்ட, 3.77 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன நீர் பிரித்து வழங்கப்படுகிறது. அணையிலிருந்து துவங்கி, வெள்ளகோவில் வரை (124 கி.மீ) பிரதான கால்வாய் அமைந்துள்ளது. இந்த கால்வாயில் இருந்து கிளை, பகிர்மான கால்வாய்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த கால்வாய் பல இடங்களில் படுமோசமான நிலையில் உள்ளது. தீபாலபட்டி உள்ளிட்ட இடங்களில் கரை முழுவதுமாக சரிந்து எந்த நேரத்திலும் கால்வாய் உடையும் அபாயம் காணப்படுகிறது. ஒவ்வொரு மண்டல பாசனத்தின் போதும், பிரதான கால்வாய் ஏதாவது ஒரு இடத்தில் உடைந்து

பாசனம் பாதிக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது. எனவே, இந்த கால்வாயை முழுமையாக புதுப்பித்து பிஏபி திட்டத்தில் கடைமடைக்கும் தண்ணீர் கொண்டு செல்ல என்னாளும் எங்கள் முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கடந்த திராவிட மாடல் ஆட்சி காலத்தில் கருத்துரு தயாரிக்கப்பட்டது. இதன்படி, பிரதான கால்வாயை முழுமையாக சீரமைத்து நான்கு மண்டல பாசனத்திலும் சீரான தண்ணீர் கிடைப்பதற்கான திட்ட வடிவமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது, புதிய அரசு பதவியேற்றதும், பிஏபி பாசன திட்டத்தில் குழாய் வழி பாசனம் செயல்படுத்தப்படும் என மாவட்ட பொறுப்பு அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார். பின்னர். இத்திட்டத்தை செயல்படுத்த வாய்ப்பில்லை என வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு, மாறி, மாறி அமைச்சர்கள் தரப்பில் அறிக்கை மட்டுமே வழங்கப்படுகிறது. ஆனால், விரைவில் துவங்க உள்ள இரண்டாம் மண்டல பாசனத்துக்கு பிரதான, கிளை, பகிர்மான கால்வாய்களை புதுப்பிக்க அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கபடாமல் உள்ளது. இந்தாண்டு மழை பெய்யாததால் உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், தாராபுரம் பாசன பகுதிகளில் வறட்சி நிலவுகிறது. எனவே. திருமூர்த்தி அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரே பாசன ஆதாரமாக உள்ளது. அதற்கான கால்வாய்களில் அடிப்படை பராமரிப்பு பணிகள் கூட மேற்கொள்ளப்படாமல் உள்ளது விவசாயி களிடையே வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

விரைவில் பாசன காலம் துவங்க உள்ள நிலையில் அவல நிலையிலுள்ள கால்வாய்களில் அடிப்படை பராமரிப்பு பணிகளை மட்டுமாவது மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் பல லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன நீரின்றி தரிசாகும் நிலை ஏற்படும் என விவசாயிகள் கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

### சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில்

# மேயர் பிரியா - கவுன்சிலர்கள் கறுப்பு உடையில் பங்கேற்றனர்!

## த.வெ.க. அரசு சென்னை மாநகராட்சிக்கு நிதி ஒதுக்காததற்குக் கண்டனம்!

சென்னை, ஆக. 29-

சென்னை மாநகராட்சியின் மாதாந்திர மன்றக் கூட்டம் இன்று நடைபெற்ற நிலையில், மாநகராட்சிக்குத் தேவையான நிதியை தமிழ்நாடு அரசு வழங்கவில்லை எனக் குற்றம்சாட்டி மேயர் ப்ரியா உட்பட திமுக கவுன்சிலர்கள் கறுப்புச் சட்டை அணிந்து கூட்டத்தில் பங்கேற்று தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

சென்னை மாநகராட்சியின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் நிதிப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கவுன்சிலர்களுக்கான வார்டு மேம்பாட்டு நிதி வழங்கப்படவில்லை என்றும், வேளச்சேரி மேம்பாலம் உள்ளிட்ட சில முக்கியத் திட்டங்களும் முன்னேறாமல் இருப்பதாகவும் மாநகரட்சி நிர்வாகம் குற்றஞ்சாட்டுகிறது.

மேலும், மாநகராட்சிக்காக பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு உரிய தொகை வழங்கப்படாதது தொடர்பாகவும் புகார்கள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சென்னையில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களுக்காக ஆண்டுதோறும் மாநகராட்சி கணிசமான தொகையை செலவிட்டு வருவதோடு, காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், தனியார் நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு உணவு கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவையும் மாநகராட்சியே ஏற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இது போன்ற திட்டங்களுக்கான செலவினங்களை சமாளிக்க தமிழ்நாடு அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று கவுன்சிலர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில், மாநில அரசு பல்வேறு திட்டங்களுக்காக கடன் பெற்று செலவினங்களை மேற்கொண்டு வரும் நிலையில், சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு சிறப்பு நிதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என துணை மேயர் மகேஸ் குமார் வலியுறுத்தியுள்ளார்.

மாநகராட்சிக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக மேயர் பிரியா அண்மையில் முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும், நகராட்சி நிர்வாகத் துறையின் பொறுப்பை கவனித்து வரும் முதலமைச்சரிடம் மாநகராட்சி ஆணையர் நேரடியாக பேசி தேவையான நிதியைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் மகேஸ் குமார் தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சிக்கான நிதி விவகாரம் தற்போது அரசியல் ரீதியாகவும் கவனம் பெற்றுள்ள நிலையில், மேயர் ப்ரியா உட்பட திமுக கவுன்சிலர்கள் அனைவரும் நேற்று (ஆகஸ்ட் 28) நடந்த மாதாந்திர மன்றக் கூட்டத்திற்கு கறுப்புச் சட்டை அணிந்து வந்து எதிர்ப்பை பதிவு செய்தது பரபரப்பை ஏற்படுத்தியது.